ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 4.3 – உருப்பிணிநங்கை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.3 – உருப்பிணிநங்கை

‡ உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் ⋆ தொடர்ந்தோடிச் சென்ற ⋆
உருப்பனை ஓட்டிக் கொண்டிட்டு ⋆ உறைத்திட்ட உறைப்பன் மலை ⋆
பொருப்பிடைக் கொன்றை நின்று ⋆ முறி யாழியும் காசும் கொண்டு ⋆
விருப்பொடு பொன் வழங்கும் ⋆ வியன் மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.1** ‖

கஞ்சனும் காளியனும் ⋆ களிறும் மருதும் எருதும் ⋆
வஞ்சனையில் மடிய ⋆ வளர்ந்த மணிவண்ணன் மலை ⋆
நஞ்சுமிழ் நாகம் எழுந்தணவி ⋆ நளிர் மா மதியை ⋆
செஞ்சுடர் நா வளைக்கும் ⋆ திருமாலிருஞ்சோலை அதே ‖ **4.3.2** ‖

மன்னு நரகன் தன்னைச் ⋆ சூழ் போகி வளைத்தெறிந்து ⋆
கன்னி மகளிர் தம்மைக் ⋆ கவர்ந்த கடல் வண்ணன் மலை ⋆
புன்னை செருந்தியொடு ⋆ புன வேங்கையும் கோங்கும் நின்று ⋆
பொன் அரி மாலைகள் சூழ் ⋆ பொழில் மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.3** ‖

மாவலி தன்னுடைய ⋆ மகன் வாணன் மகள் இருந்த ⋆
காவலைக் கட்டழித்த ⋆ தனிக் காளை கருதும் மலை ⋆
கோவலர் கோவிந்தனைக் ⋆ குற மாதர்கள் பண் குறிஞ்சிப் ⋆
பா ஒலி பாடி நடம் பயில் ⋆ மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.4** ‖

‡ பல பல நாழம் சொல்லிப் ⋆ பழித்த சிசுபாலன் தன்னை ⋆
அலவலைமை தவிர்த்த ⋆ அழகன் அலங்காரன் மலை ⋆
குல மலை கோல மலை ⋆ குளிர் மா மலை கொற்ற மலை ⋆
நில மலை நீண்ட மலை ⋆ திருமாலிருஞ்சோலை அதே ‖ **4.3.5** ‖

பாண்டவர் தம்முடைய ⋆ பாஞ்சாலி மறுக்கம் எல்லாம் ⋆
 ஆண்டங்கு நூற்றுவர் தம் ⋆ பெண்டிர் மேல் வைத்த அப்பன் மலை ⋆
பாண் தகு வண்டினங்கள் ⋆ பண்கள் பாடி மதுப் பருகத் ⋆
 தோண்டல் உடைய மலை ⋆ தொல்லை மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.6** ‖

கனங்குழையாள் பொருட்டாக் ⋆ கணை பாரித்து ⋆ அரக்கர் தங்கள்
 இனம் கழுவேற்றுவித்த ⋆ எழில் தோள் எம் இராமன் மலை ⋆
கனம் கொழி தெள் அருவி ⋆ வந்து சூழ்ந்தகல் ஞாலம் எல்லாம் ⋆
 இனம் குழுவாடும் மலை ⋆ எழில் மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.7** ‖

எரி சிதறும் சரத்தால் ⋆ இலங்கையினை ⋆ தன்னுடைய
 வரி சிலை வாயில் பெய்து ⋆ வாய்க் கோட்டம் தவிர்த்துகந்த ⋆
அரையன் அமரும் மலை ⋆ அமரரோடு கோனும் சென்று ⋆
 திரிசுடர் சூழும் மலை ⋆ திரு மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.8** ‖

கோட்டு மண் கொண்டிடந்து ⋆ குடங்கையில் மண் கொண்டளந்து ⋆
 மீட்டும் அதுண்டுமிழ்ந்து ⋆ விளையாடும் விமலன் மலை ⋆
ஈட்டிய பல் பொருள்கள் ⋆ எம்பிரானுக்கடியுறை என்று ⋆
 ஓட்டரும் தண் சிலம்பாறுடை ⋆ மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.9** ‖

‡ ஆயிரம் தோள் பரப்பி ⋆ முடி ஆயிரம் மின் இலக ⋆
 ஆயிரம் பைந்தலைய ⋆ அனந்த சயனன் ஆளும் மலை ⋆
ஆயிரம் ஆறுகளும் ⋆ சுனைகள் பல ஆயிரமும் ⋆
 ஆயிரம் பூம் பொழிலும் உடை ⋆ மாலிருஞ்சோலை அதே ‖ **4.3.10** ‖

‡ மாலிருஞ்சோலை என்னும் ⋆ மலையை உடைய மலையை ⋆
 நாலிரு மூர்த்தி தன்னை ⋆ நால் வேதக் கடல் அமுதை ⋆
மேல் இருங்கற்பகத்தை ⋆ வேதாந்த விழுப் பொருளின் ⋆
 மேல் இருந்த விளக்கை ⋆ விட்டுசித்தன் விரித்தனனே ‖ **4.3.11** ‖

அடிவரவு — உருப்பணி கஞ்சன் மன்னு மாவலி பலபல பாண்டவர் கனம் எரி கோட்டு ஆயிரம் மாலிருஞ்சோலை நாவகாரியம்

**உருப்பிணிநங்கை முற்றிற்று**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்